**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.74/2016**

2026=ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**D.W.3 தருமன், வயது 53, த/பெ கண்ணன்**

**நேரம் -12.35**

**குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணமான பதிவேட்டின் பெயர் என்ன என்றால் தீர்மான புத்தகம் ஆகும். மேற்படி புத்தகத்தில் 2014ம் ஆண்டிலிருந்து தீர்மானங்கள் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புத்தகத்தில் 2006 முதல் 2013ம் ஆண்டு வரை தீர்மானம் போடப்பட்டதற்கான எந்த பதிவும் இல்லை என்றால் சரியல்ல. பின் ஏன் தனி தனியாக தீர்மான புத்தகம் போடப்பட்டது என்றால் 2014 வரை பொதுவாக இருந்துள்ளது, அதன் பின்னிட்டு தனி உரிமை கோரியதால் தனி தனியாக தீர்மான புத்தகம் போடப்பட்டது. மேற்படி தீர்மான புத்தகம் என நான் சொல்வது போல் தலைப்பு எதுவும் புத்தகத்தில் இல்லை என்றால் சரிதான்.

2. அசல் புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல், ஏன் நகலை தாக்கல் செய்தோம் என்றால் வழக்கறிஞர் சொல்லியவாறு தாக்கல் செய்துள்ளேன். அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் நகலை தாக்கல் செய்துள்ளதால் அதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றால் நாங்கள்தான் நிர்வாகி என்பதால் கோயிலை நிர்வாகம் செய்து வந்தோம், நாங்கள் நிர்வாகி இல்லை என்று சொன்னதால் மேற்படி புத்தகத்தை தாக்கல் செய்யவில்லை. மேற்படி பி.வா.சா.ஆ.43 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்பதால் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாமல் அதன் நகலை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.43 ஆவணத்தில் 2006 முதல் கோயில் கட்டியதற்கான வரவு செலவு மேற்படி ஆவணத்தில் இல்லை என்றால் சரியல்ல. சாட்சி அதன் பின்னிட்டு இல்லை என்று கூறினார்.

3. மேற்படி பி.வா.சா.ஆ.43ல் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை பொது குழு கூட்டி தேர்வு செய்யப்பட்ட ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது, 19வது பக்கத்தில் உள்ளது. மேற்படி பக்கத்தை நாங்கள் குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். 01.10.2015ல் தலைவர், செயலாளர், பொருளாளர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் 08.03.2014 அன்றே தலைவர், செயலாளர், பொருளாளரை தேர்ந்தெடுத்ததாக எழுதியுள்ளதை எவ்வாறு எழுதியுள்ளோம் என்றால் 2008ம் ஆண்டிலிருந்தே தலைவர், செயலாளர், பொருளாளர் என்று கூட்டத்தில் பேசி எழுதப் படாமல் நாங்கள் நிர்வகித்து வந்தோம். எழுதப்படாமல் என்றாலும், நாங்களே எங்களை தேர்வு செய்து கொண்டோமா என்றால் பொது குழு கூடிதான் தேர்வு செய்தார்கள். மேற்படி சம்பவம் தொடர்ச்சியாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. மேற்படி பி.வா.சா.ஆ.43ல் ஒயிட்னர் போடப்பட்டு தேதி திருத்தப்பட்டுள்ளது என்றால் 90 உறுப்பினர்கள் வசதிக்கேற்ப தேதியை திருத்தம் செய்தோம். என்ன தேதி எழுதி பின்னர் என்ன தேதியாக திருத்தம் செய்தோம் என்றால் 10 வருடமாகி விட்டதால் தற்போது எனக்கு ஞாபகமில்லை, அப்போதைய செயலாளர் தேதியை குறிப்பிட்டுள்ளார். 25.02.2014ல் செயலாளர் கையொப்பம் செய்து தேதியை குறிப்பிட்டுள்ளார் என்றாலும் ஆனால் கூட்டம் கூடிய நாள் 08.03.2014 அன்று என்றாலும், கூட்டம் கூடுவதற்கு முன்பே கையொப்பம் பெற்று கொள்வோமா என்றால் 28.02.2014 அன்று கூட்டம் கூடி 08.03.2014 அன்று அபிஷேகம் நடைபெறும் என்று குறிப்பிட்டுள்ளோம். மேற்படி விவரங்களை பி.வா.சா.ஆ.43ல் குறிப்பிட்டு சொல்லியுள்ளோமா என்றால் சாட்சி தற்போது அது 28.02.2014 அல்ல 25.02.2014 என்று கூறினார்.

5. பொதுவாக தீர்மானம் செய்ய வேண்டும் என்றால் கூட்டம் கூடி உறுப்பினர்கள் அனைவரும் சம்மதித்துதான் தீர்மானம் போடப்படும் என்றாலும், ஆனால் பி.வா.சா.ஆ.43ல் அவ்வாறு நடைப்பெறவில்லை என்றாலும், வெவ்வேறு தேதிகளில் குறிப்பிட்டு தீர்மானம் போடப்பட்டுள்ளது என்று சொல்வதால் சந்தேகம் ஏற்படுகிறது என்றால் புதியதாக நிர்வாகிகள்

பொறுப்பேற்று கொண்டதால் வழிமுறைகளை நாங்கள் சரியாக பின்பற்றவில்லை. நிர்வாகம் செய்த பின்னர் தனி புத்தகம் போடப்பட்டு அதை பாதுகாத்து வருகிறோம் என்றால் சரிதான், 6ம் ஆண்டு திருவிழா, 7ம் ஆண்டு திருவிழாவை ஆடிட்டரிடம் கொடுத்து வரவு செலவை சரி பார்த்துள்ளோம். எந்த வருடம் 6ம் ஆண்டு, 7ம் ஆண்டு என்றால் 2014 - 6ம் ஆண்டும், 2015-7ம் ஆண்டு ஆகும்.

6. 10 வருட காலமாக புத்தகம் ஆடிட்டர் வசம் உள்ளதா என்றால் சரியல்ல, எங்கள் வசம்தான் உள்ளது. பி.வா.சா.ஆ.43 ஆடிட்டரிடம் கொடுக்கவில்லையா என்றால் இல்லை, இது தீர்மான புத்தகமாகும். மேற்படி தீர்மான புத்தகத்திலும், வரவு செலவை காண்பித்துள்ளதால் மேற்படி புத்தகத்தை கொடுக்கவில்லையா என்றால் மாதிரி வரவு செலவை காண்பித்தோம். மேற்படி பி.வா.சா.ஆ.43ஐ மாதிரி வரவு செலவு என நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளதால் தீர்மானத்தையும் மாதிரி என்று எடுத்து கொள்ளலாமா என்றால் தீர்மானம் 2014 முதல் 2026ம் ஆண்டு வரை போடப்பட்டதற்கான ஆவணமாகும்.

**வாதி வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

**நேரம் - 1.10**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni